நிலையாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அரசுத் துறையிலே கல்லூரியை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், சிறுபான்மை இனத்தைச் சார்ந்த தனியார்கள் கல்லூரி அமைக்க முன்வந்தால், அரசு முன் வைப்புத் தொகையாக 10 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்ற விதியினை சிறிது தளர்த்தி அதை இரண்டு தவணையாக பெற்றுக்கொண்டு தனியார் அமைப்பதற்காகவாவது அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் விதிகளைத் தளர்த்து வோமானால் நிறைய பேர் இந்தக் கல்லூரிகளை துவக்க முன்வருகிறார்கள். அதனால் வேறுசில பிரச்சினைகள் ஏற்படு கின்றன என்ற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிபந்த னைகளை நாம் விதித்திருக்கிறோம். மற்றப்படி அங்கே கல்லூரியை ஆரம்பிக்க யாரேனும் முன்வருவார்களேயானால் அதுபற்றி முடிவு எடுக்கின்ற நேரத்தில் அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 224, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு மக்கள் **நல்வாழ்வுத்** துறை அமைச்சர்.

224—

பழைய ஆயக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆய்வுக்கூட வசதி

* 9030— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடி அரசு மருத்து மனைக்கு ஆய்வுக்கூட வசதி தற்போது இல்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் அவ்வசதி அங்கு ஏற்படுத்தி தரப்படுமா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பகுதி 2 திட்டத்தின்கீழ் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரத்திற்கேற்பவும் ஆயக்குடி அரசு மருத்துவமனையில் ஆய்வுக்கூட வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

[1993 ஏப்ரல் 2

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆயக்குடியில் நிதி நிலைக்கு ஏற்ப இந்த ஆய்வுக் கூடம் ஏற்படுத்தப்படும் என்று நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு, இந்த ஆயக்குடியானது, பேரூராட்சியாகவும் மிகவும் ஏழையெளிய மக்கள்வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்கள் வாழக்கூடிய ஒரு பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால் இதை எவ்வளவு விரைவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்கள்? இந்த ஆண்டிலா? அடுத்த ஆண்டிலா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே ஆர்வமாக இருக்கிறார்கள். இது இந்த நிதியாண்டிலா? அடுத்த நிதியாண்டிலா? என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது எந்த நிதியாண்டில் நிதி சரியாக இருக்கிறதோ அந்த நிதியாண்டில் செய்யப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆயக்குடி பேரூராட்சியில் உள்ள இந்த மருத்துவமனையில் ஆய்வுக்கூட வசதி இல்லாத காரணத்தால் நோயாளிகள் முறையாக 'டையாக்னசிஸ்' செய்ய முடியாத ஒரு சூழ்நிலையும், அதன் விளைவாக நோயை 'இனிசியல் ஸ்டேஜ்'லேயே தடை செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில், முற்றிய நிலையில் ஏழை நோயாளிகள் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கும், 5 கிலோ மீட்டர் அப்பாலுள்ள அரசு மருத்துவமனைக்கும் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இதனுடைய முக்கியத்துவத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லி. இதை விரைவில் கனிவோடு பரிசீலிப்பார்களா என மீண்டும் வலியிறுத்தி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக கனிவோடு பரிசீலிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். ஆனால், நிதிப் பற்றாக்குறை குறுக்கே நிற்கிறது. இங்கே 18 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அது அமைந்துள்ளது. அருகாமையிலே பழனி தாலுகா மருத்துவமனை இருக்கிறது. எனவே, அங்கு எல்லா வசதிகளும் இருக்கின்ற காரணத்தினால், இப்பொழுது அங்கு தேவையில்லை என்ற பதிலைத்தான் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய

1993 ஏட்ரல் 2]

வேண்டுகோளுக்கிணங்க விரைவாக அதைப் பற்றி ஆலோசித்து, நிதிப் பிரச்சினை சீராகிற நேரத்திலே கண்டிப்பாக இதைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 225, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

225—

இராயமுண்டாம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*11085—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், வெண்டையம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட இராயமுண்டாம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 30,000 மக்கட்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அரசின் கொள்கையாக உள்ளது. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,01,213-க்கு ஏற்ப அங்கு ஏற்கனவே மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. எனவே இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைப்பதற்கில்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதியில் இரண்டியமுண்டாம்பட்டி ஊராட்சியில் இராயமுண்டாம்பட்டி கிராமத்திலிருந்து ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசுக்கு முறையீடு வந்துள்ளதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.